# காணாமற் போன ஆடு திராக்மா

**முன்னுரை**

கடந்த மாதம் 'இரு மகன்களின் மனமாற்றம்!' பற்றிச் சிந்தித்த பின்னணியில் அதற்கு முன் வருகின்ற இரு உவமைகளை – காணாமற் போன ஆடு, திராக்மா – ஆகியவற்றின் செய்தியை இக்கட்டுரையில் காண முயல்வோம்.

**பின்னணி**

இவ்விரு உவமைகளுக்கும், ஏன் ஊதாரி மைந்தன் உவமைக்கும் பின்னணியாக அமைவது லூக் 15:1–2 தான்: "வரி தண்டுவோர், பாவிகள் யாவரும் இயேசு சொல்வதைக் கேட்க அவரிடம் நெருங்கி வந்தனர். பரிசேயரும், மறைநூல் அறிஞரும், 'இவர் பாவிகளை வரவேற்று அவர்களோடு உணவருந்துகிறாரே' என்று முணுமுணுத்தனர். ஆக, பரிசேயர், மறைநூல் அறிஞரின் முணுமுணுப்புக்கு இயேசுவின் பதிலாய், அவரின் தன்னிலை விளக்கமாய் அமைந்தவைதான் மூன்று உவமைகளும். இவற்றுள், முதல் இரண்டு உவமைகளை ஒன்றாகவும் மூன்றாவதை தனியாகவும் அவை சொல்லப்பட்ட விதத்தைக் கொண்டு பிரிக்கலாம்.

முதல் இரண்டு உவமைகளில் ஆடும், திராக்மாவும் எப்படி தொலைந்தன என்பது விளக்கப்படவில்லை. அவை தொலைந்ததைக் கொண்டுதான் கதை தொடங்குகின்றது. ஒருவேளை, அவை விலங்காகவும், பொருளாகவும் அவற்றை அதற்கு பொறுப்பேற்க செய்ய முடியாது என அவற்றை குற்றவாளியாக்காமல், கதையை இயேசு தொடங்குவதாகக் கொள்ளலாம். ஆனால் ஊதாரி மைந்தன் உவமையிலே அவன் மனிதன் என்பதால் அவன் 'தொலைந்த வரலாறு' விவரிக்கப்படுகின்றது. அதன் வழி பாவிகள் மனம் மாற வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்படுகின்றது.

**உவமைகள் வலியுறுத்தும் உண்மைகள்**

உவமைகளைப் பற்றி விவரிக்கும்போது, ஒரு சிலர் ஓர் உவமைக்கு ஒரு செய்தி அல்லது ஒரு வலியுறுத்தும் உண்மைதான் இருக்கமுடியும் என்று கூறுவர். ஆனால் இது உவமையாக இருப்பதாலும், இறைவார்த்தையாக இருப்பதாலும் பல உண்மைகள் இருக்கக் கூடும், இருக்க முடியும் என்பதுதான் நம் துணிவு. அதன்படி இவ்விரு உண்மைகளும் வலியுறுத்தும் சில உண்மைகளை இவண் பட்டியலிடுவோம்.

### 1. ஒன்று பலவற்றை விட உயர்வானது, மதிப்புள்ளது

"காணாமற் போனதை. . . தேடிச் செல்ல மாட்டாரா?" (வச. 4) "(திராக்மாவை) கவனமாகத் தேடுவதில்லையா?" (வச. 8) எனும், யேசுவின் இரு கேள்விகளும், காணாமல்போன ஓர் ஆடும், ஒரு திராக்மாவும் மற்ற தொலைந்து போகாத ஆடுகள், திராக்மாவையும் விட உயர்ந்தவை எனவும் அல்லது அவையும் இடையன் மற்றும் பெண் மணியின் பார்வையில் விலையேறப் பெற்றவை; அவைகளுக்காக இத்தகைய முயற்சிகளை எடுக்கும் அளவுக்கு மதிப்புமிக்கவை எனும் செய்தி இங்கு வெளிப்படுகின்றது.

### 2. தேடுபவரின் பண்பு நலன்

இவ்விரு உவமைகளிலும் தேடுபவர்கள் (ஆயன், பெண்) தாங்கள் தொலைத்தவற்றை அல்லது தொலைந்தவற்றைத் தேடுவதற்கு பல முயற்சிகளை எடுக்கின்றனர். முக்கியமாக, பத்து திராக்மாக்களுள் ஒன்றைத் தொலைத்த எழைப் பெண் (ஒரு திராக்மா ஒருநாள் கூலிக்கு சமம்) 'எண்ணெய் விளக்கை ஏற்றி, வீட்டைப் பெருக்கி' (வச 8) தேடுவதாக இத்தேடல் விவரிக்கப்படுகின்றது. மேலும் இத்தேடல், தொலைந்தவற்றைக் 'கண்டுபிடிக்கும் வரை' (வச. 4, 8) இரு உவமைகளிலும் தொடர்கின்றது. எனவே ஆதங்கத்தோடு தேடல் தொடர்கின்றது.

இந்த உவமையின் தேடுபவர் இறைவனைக் குறிப்பதால், இறைவனின் பண்புகளை இந்த உவமைகளின் வழி வெளிக்கொணர்கின்றார் இயேசு. அதாவது, இறைவனுக்கு ஒவ்வொரு நபரும் முக்கியமானவர், தேடத் தகுந்தவர். தொலைந்தவரைக் கண்டடையும் வரை, அவர் கிடைக்கும் வரை இறைவன் ஏக்கத்தோடும், ஆதங்கத்தோடும் தேடுகின்றார்.

### 3. வரிதண்டுவோருக்கும் பாவிகளுக்கும் தரும் செய்தி

இயேசுவின் இந்த உவமைகளைக் கேட்ட வரி தண்டுவோருக்கும், பாவிகளுக்கும் இவ்விரு உவமைகளும் எத்தகைய செய்தியை தந்திருக்கும்? இதன் வழி இயேசு அவர்களின் மனமாற்றத்தை விரும்புகின்றார். இரக்கத்தோடு, ஆதங்கத்தோடு அவர்களை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கின்றார். தங்களையும் மதிப்பும் மாண்பும் உடையவர்களாக ஏற்றுக்கொள்கிறார். எனவே அவர்மீது நம்பிக்கை வைத்து மனம்மாறலாம் எனும் எண்ணம் அவர்களுள் எழ இந்த உவமைகள் அவர்களுக்கு உதவியிருக்கும்.

### 4. பரிசேயர் மற்றும் மறைநூல் அறிஞருக்கு இவ்வுவமைகளின் செய்தி

இயேசுவின் இவ்வுவமைகளையும் கேட்ட இயேசுவுக்கு எதிராக முணுமுணுத்த பரிசேயர் மற்றும் மறைநூல் அறிஞர் எத்தகைய செய்தியைப் பெற்றிருப்பர்? இயேசு பாவிகளை மனமாற்றத்திற்கு அழைக்க இவ்வளவு முயற்சிகளை எடுக்கும்போது, அவரின் நோக்கத்தையும், அவர்கள்பால் (பாவிகள் பால்) கொண்ட அன்பையும் பார்க்கின்றபோது அவரை அவர்களால் எப்படி எதிர்க்கமுடியும்? அவரை எதிர்ப்பதில் நியாயம் இல்லையே. அவர் பாவிகளை வரவேற்பதும், அவர்களோடு உணவருந்துவதும் அவர்களில் மனமாற்றத்தைக் கொணரத்தானே. ஒருவேளை அவரின் செயல்பாடுகள் (பாவிகளை வரவேற்பது, அவர்களோடு உணவருந்துவது) அவர்களுக்கு ஏற்புடையதாய் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவரின் நோக்கம் உயரியது தானே. இங்கு இயேசு சட்டத்தை மீறுவதுபோல தோன்றினாலும் அது அவர்களை (பாவிகளை) சட்டத்தின்படி வாழ அழைக்கத்தானே என்பதையெல்லாம் புரிந்துகொள்ள அவர்களுக்கு இவ்விரு உவமைகளும் உதவியிருக்கும்.

### 5. மனமாற்றத்தால் வரும் மகிழ்ச்சி

தொலைந்த ஆட்டையும் திராக்மாவையும் தேடுவதை விளக்குவதற்கு இயேசு எடுத்துக்கொள்ளும் அளவுக்கு அதே நேரம் அவற்றை கண்டடைந்ததும் வரும் மகிழ்வை விளக்குவதற்கும் எடுத்துக் கொள்கின்றார். எனவே தேடுதலின் அக்கறையும் கரிசனையும் உண்மையில் அதைக் கண்டுபிடித்து அதன் மகிழ்ச்சியைக் கொண்டாடுவதில்தான் நிறைவடைகின்றது. இது தொலைந்து போனவை தேடுபவரின் கண்ணோட்டத்தில் எவ்வளவு முக்கியமானவை, விலையேறப் பெற்றவை, மாண்புடையவை என்னும் கருத்தை மீண்டும் வலியுறுத்துகின்றது. இந்த மதிப்பு இத்தகைய அளவுகடந்த மகிழ்ச்சியை நியாயப்படுத்துகின்றது. இனி இந்த மகிழ்ச்சிக் கொண்டாட்டம் வரி தண்டுவோர், பாவிகள் எனும் முதல் குழுவுக்கும், பரிசேயர், மறைநூல் அறிஞர் ஆகிய இரண்டாம் குழுவுக்கும் எத்தகைய செய்தியைத் தந்திருக்கும் எனக் காண்போம்.

#### அ. வரிதண்டுவோர், பாவிகளுக்கு. . .

இவர்கள் இந்த மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தைப் பற்றிக் கேட்கின்ற போது மனமாற்றத்தால் வரும் மகிழ்ச்சியில்தான் விண்ணகம் நிறைந்திருக்கும் என்பதை உணர்ந்து கொள்வர். எனவே மனம்மாற்றத்தால் வருவது மகிழ்ச்சியே அன்றி தண்டனை பற்றிய பயம் அல்ல. மேலும். தேடுபவர்கள் தொலைந்தவற்றின் மீது கொண்ட தளர்வுறாத அன்பும் அவற்றை அவர்கள் எந்த அளவுக்கு மதிக்கின்றனர், அவற்றிற்கு மாண்பு அளிக்கின்றனர் என்பதையும் இம்மகிழ்ச்சி வெளிப்படுத்து கின்றது. இவையெல்லாம் அவர்களை மனமாற்றத்திற்கு உந்தித்தள்ளும்.

#### ஆ. பரிசேயர், மறைநூல் அறிஞருக்கு. . .

தொலைந்த பாவிகளை இறைவன் இயேசு வழியாக தேடிவருவது இறுதியில் அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொண்டு வருவதற்காகவே என்பதை இக்குழுவினரும் புரிந்துகொள்ள வேண்டும் என இயேசு விரும்புகின்றார். எனவே அனைவரின் மகிழ்வே இறுதி இலக்கு என்பதை இக்குழுவினர் மனதில் கொள்ளவேண்டும். இல்லையெனில், இவர்கள் ஒரு சில சட்டங்களை நுணுக்கமாய் கடைபிடிப்பது மட்டுமே வாழ்க்கை என்றெண்ணி, அதிலேயே உழன்று கொண்டிருப்பர். இவை அனைத்தின் வழியாக பரிசேயரும், மறைநூல் அறிஞரும் பாவிகளை வெறுப்பதற்கு பதிலாக அவர்களை இக்குழுவினர் அன்பு செய்து ஏற்றுக் கொள்ள வேண்டும் எனும் செய்தியைத் தருகின்றார், வேண்டுகோள் விடுக்கின்றார்.

#### முடிவாக. . .

ஊதாரி மைந்தன் உவமையின் இறுதியில் மூத்த மகன் தந்தையின் தன்னிலை விளக்கத்தை ஏற்றுக்கொண்டானா இல்லையா என்று இயேசு கூறாமல் விட்டதே இவ்விரு உவமைகளுக்கும் முடிவாக

அமைகின்றது. அதாவது, இயேசு பாவிகளை வரவேற்பதன் நியாயத்தை பரிசேயரும் மறைநூல் அறிஞரும் ஏற்றனரா என்பது இந்நிலையில் கூறப்படவில்லை. இறுதிவரை அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளாமலே இருந்து விடுவர். ஆனால் பாவிகளுக்கு இவ்விரு உவமைகளும் தங்களின் மாண்பு, தங்கள் மீது இறைவன் கொண்டுள்ள மாறாத தளர்வுறாத அன்பு, தங்களின் மனமாற்றத்தினால் அனைவருக்கும் கிடைக்கும் மகிழ்வு ஆகியவற்றை வலியுறுத்தி, அவர்களை மனமாற்றத்திற்கு அழைக்கின்றன.

**அருள்பணி. A. ஜான் பாப்டிஸ்ட்**